141

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் - 06

**LLU6715/LWU4323- தொழிற் சட்டம்**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 2023/2024

காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 08.11.2024 நேரம்: பி.ப.03.30 - பி.ப.04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02)
ஒரு (01) வினாவுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1) ரஜித் இலங்கையில் நன்கு அறியப்பட்ட விவசாய - இரசாயன நிறுவனத்தின் பிராந்திய அலுவலகத்தில் ஆய்வு அலுவலராக பணிபுரிகிறான். அவனுடைய பொறுப்புக்கள், விவசாயிகளை சந்திப்பதையும் நிறுவனத்தின் உற்பத்திகளை மேம்படுத்துவதையும் வாரத்தில் மூன்று நாள் களப்பணி மேற்கொள்வதையும் உள்ளடக்கி இருந்தது. களப்பணியின் போது ரஜித் நிறுவனத்தினுடைய பெயர் பொறிக்கப்பட்ட T-shirt ஐ அணிய வேண்டும். ஆனால் சமூகமளிப்பு பதிவு புத்தகத்தில் அவன் கையொப்பமிட அவசியமில்லை. அவன் பிரயாணத்திற்காக அவனது தனிப்பட்ட மோட்டார் வண்டியை பயன்படுத்துகிறான். மேலும் ரஜித் கிரமமாக உள்ளூர் இரசாயன விற்பனை முகவர்களுடன் தொடர்பாடலை பேணுவதுடன் அவனது பணி முன்னேற்றம் தொடர்பில் தலைமைக் காரியாலயத்திற்கு அறிக்கையிடுவான். எஞ்சிய இரண்டு நாட்களும் பொலனறுவையில் உள்ள பிராந்திய காரியாலயத்திற்கு தனது களப்பணி வேலை மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகள் பற்றி அறிக்கையிடுவான். அவனுடைய சம்பளம் கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்தினால் செலுத்தப்படுவதுடன் விவசாயிகளுக்கு விற்பனை செய்யும் இரசாயன பொருட்களுக்காக அவன் தரகு ஒன்றினையும் பெறுகிறான்.

அண்மையில், நிறுவனம் ரஜித் உடைய சேவைகளை இடைநிறுத்தியது. ரஜித் தனது சேவை முடிவுறுத்தலுக்கான இழப்பீட்டை கோரிய போது நிறுவனம் ரஜித் ஒரு சுயாதீன ஒப்பந்தக்காரர் எனவும் நிறுவனத்தின் தொழிலாளி அல்ல எனவும் குறிப்பிட்டது.

ரஜித்திற்கு நிறுவனத்துடன் உள்ள பணியுறவு சேவை ஒப்பந்தமா அல்லது சேவைக்கான ஒப்பந்தமா என்பதை ஆராய்க.

உமது விடை பொருத்தமான சட்ட அதிகாரங்களின் அடிப்படையில் அமைய வேண்டும்.

(20 புள்ளிகள்)

2) "தகுதி காண் தொழிலாளி ஒருவருக்கு அவனுடைய சேவை முடிவுறுத்தலுக்காக தொழில் தருனரால் நிவாரணம் வழங்க வேண்டுமாயின், தொழில் தருனர் தீய எண்ணத்துடன் (*mala fide*) செயற்பட்டிருத்தல் வேண்டும் என்ற எண்ணக்கருவின் மீதே அமைந்துள்ளது என்ற அடிப்படையை எமது நீதிமன்றங்கள் உருவாக்கியுள்ளன. எனவே தீய எண்ணம் என்ற மூலத்தை உறுதிப்படுத்துகின்ற மட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்தின் அடிப்படையில் மாத்திரமே முடிவுறுத்தலுக்கான அடிப்படை பரீட்சிக்கப்படும்."

*S. Egalahewa, A General Guide to Sri Lanka Labour Law, 2018 at p.96*

இலங்கையில் தகுதிகாண் தொழிலாளியுடைய தற்போதைய சட்ட நிலைமையை இக்கூற்று சரியாக பிரதிபலிக்கிறதா? உமது விடைக்கான காரணங்களை பொருத்தமான சட்ட அதிகாரங்களுடன் தருக.

**(20 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -